Rgistored as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹு ஆவணி மீ 25 ஆம் உ திங்கட்கிழமை (10 - 09 - 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 20 ஓசை 204

## சிறிலங்காவுக்கு உதவுமாறு நட்புநாடுகளிடம்கோரிக்கை

(கொழும்பு)

குவைத்தில் சிக்கியுள்ள இலங்கையர்களை தாயகம் அனுப்பி வைக்கும் விடயத்தில் ஏதாவது வகையில் உதவுமாறு நட்புறவு நாடுகளை பதில் வெளிநாட்டு அமைச்சர் திரு ஜோன் அமரதுங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

சர்வதேச குடியகல்வு ஸ்தாபனம் இதுவரை ஆறு விமானங்கள் மூலம் குவைத்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்கா படையினராலும், முஸ்லிம் காடையினராலும்

# அம்பாறை, தீவுப்பகுதியிலும் 500தமிழருக்குமேல்படுகொலை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அதிரடிப்படையினரும், முஸ்லிம் காடையர்களும் சேர்ந்து அம்பாறை மாவட்டத்திலும், சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவுப் பகுதியிலும் கடந்த மாதத்தில் 500க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களைக் கொலை செய்துள்ளனர் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மாதத்தில் (01 - 08 - 1990—27 - 08 - 1990) 200க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையினாலும், முஸ்லிம் கும்பல்களாலும் கொல்லப்பட்டுள்ளனர். தமிழீழ - சிறிலங்கா போர் ஆரம்பித்ததில் (11-06-1990) இருந்து கடந்த மாத இறுதி வரையில் அம்பாறை மாவட்டத்தில் 1879 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு விடுத்த (4ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் 5 சிப்பாய்கள் கால்களை இழந்தனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று சிலாவத்தை என்னும் இடத்தை நோக்கி வெளியேற முற்பட்ட சிறிலங்காஇராணுவம்கள்ளப்பாடு, சிலாவத்தை ஆகிய இடங்களில் விடுதலைப்புலிகளின் மிதி வெடியில் சிக்குண்டு ஐந்து இராணுவம் கால்களை இழந்தது

இதனைத்தொடர்ந்து முன்னேற முடியாத நிலையில் இராணுவத்தினர் முகாமுக்குள் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

## மூன்று தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புல்லுமலை என்னும் கிராமத்தை நேற்றுக்காலை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவம் ஆறு பொதுமக்களைக் கைது செய்து கொண்டு சென்றது.

இவர்கள் அழைத்துச்செல் (4ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவெளி அகதிமுகாமில் 10 தமிழ் இளைஞர் கைது

(திருமலை)

அகதி முகாமுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கு தங்கி இருந்த பத்து அப்பாவித்தமிழ் இளைஞர்களை கைது செய்து இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளி என்னுமிடத்தில் அமைந்துள்ள அகதி முகாம் ஒன்றிலேயே இந்தக் கைது சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். கோட்டைமீது இரசாயனக் குண்டுகள்

## சிறிலங்கா அரசின் குற்றச்சாட்டுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை இராணுவ முகாம்மீது இரசாயனக் குண்டுகளை விடுதலைப்புலிகள் பாவித்தார்கள் என்ற சிறிலங்காஅரசின்குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மறுத்ததோடு, தாம் சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்ட விதத்திலேயே போரை நடத்துவதாகவும், சிறிலங்கா அரசு தான் நேர்மாறான விதத்தில் போரை நடத்துவதாகவும் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி தலைமைச் செயற்குழு விடுத்த அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையின் முழுவிபரமும் வருமாறு;

கோட்டை இராணுவமுகாம் மீது விடுதலைப்புலிகள் இரசாயனக் குண்டுவீச்சை நடாத்தி உள்ளார்கள் என்ற சிறிலங்கா (4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை ஆசிரியர் சங்கம்

## தமிழரின்சுயநிர்ணயஉரிமையை அங்கீகரிக்கஅரசிடம்கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தும் வடக்கு - கிழக்கில் இருந்து ஆயுதப்படைகளை திருப்பி அழைத்து சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியும் தற்போதைய சிக்கலுக்கு தீர்வு காண வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் சிறிலங்கா அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக இந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஆறாவது அரசியல் சட்டதிருத்தத்தினை நீக்கியும்பிரச்சினைக்குப்பேச்சு (4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்நகர் மீதான விமானக் குண்டுவீச்சு

## 24 மணிநேரத்தில் 4 பேர்பலி; ஆறுபேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை விமானங்கள்நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இருந்து நேற்று இரவுவரை விட்டுவிட்டு பாரிய குண்டுகளை யாழ்நகர்மீது பரவலாக வீசின. மக்கள் பெருமளவு பகுதியை விட்டு வெளியேறிவிட்டாலும் இத்தாக்குதலால் நான்கு பொது மக்கள்கொல்லப்பட்டார்கள், நால்வர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு மூன்றுமுறை குண்டு வீச்சு விமானங்கள் யாழ்நகர்மீது தாக்குதலைத் தொடுத்தன. வை 12ரக பாரிய விமானம் பன்னிரெண்டு குண்டுகளை வீசியது. இரவு பத்துமுப்பது மணியளவிலும் நடுநிசி ஒரு மணியளவிலும், அதிகாலை நான்குமுப்பது மணியளவிலும் இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள்முகாமுக்கு ஆள்தேடும் பணியில் சிறிலங்கா இராணுவம்

(வவுனியா)

கொழும்பிலுள்ள இரண்டு முகாம்களிலும் அகதிகளாக தங்கியுள்ள தமிழர்களை வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அகதி முகாமில் தங்கவைப்பதற்கான முயற்சிகளை சிறிலங்கா அரசு மேற்கொண்டுவருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

மேற்படி புதியமுகாம் வவுனியா நகரில் உள்ள தமிழ் மகாவித்தியாலயத்தில் அண்மையில் அமைக்கப்பட்டுள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு தபால்கள் தரம் பிரிக்கப்பட்டு விட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதிக்கான தபால்கள் யாவும் தரம் பிரிக்கப்பட்டு நேற்றுமாலை யாழ். இந்துக்கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டன.

சுன்னாகம் தபால் நிலையத்தில் வைத்து இத்தபால்கள் தரம்பிரிக்கப்பட்டன. இரவு பகலாக நடந்த இந்த தபால் தரம் பிரிக்கும் வேலையில் சுன்னாகம் தபால் அதிபரும் ஊழியர்களும் சிரமத்தைப் பாராது கடமை செய்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் (தீவுப் பகுதி தவிர) தபால்கள் தரம் பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு விட்டன.

சர்வதேச அமைப்புக்கள்கூட உதவ முன்வரவில்லை

## மட்டு. மாவட்டத்தில் 10 குழந்தைகள் பட்டினியால் சாவு

(யாழ்ப்பாணம்)

''கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் பட்டினிச் சாவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக மட்டக்களப்பில் கடந்த மாதம் பத்துக் குழந்தைகள் போதிய உணவின்றி உயிரிழந்துள்ளன. இந்நிலையில் இதுவரை எந்த ஒரு சர்வதேச அமைப்பும் இந்த மக்களுக்கு உதவ முன்வராததுடன், இம் மக்களுக்கு உணவுகூட கிடைக்கவில்லை'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### மலிவு விற்பனை புத்தகங்கள்

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் 1989 இல் 1990 இல் வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள். 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்.

(R/ 616)

### இடம் மாற்றம்

இராசா டீசல் என்ஜினியர்ஸ், 180 பருத்தித்துறை வீதியிலிருந்து தற்காலிகமாக 28/3 மணல்தறை லேன் கந்தர்மடம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(R/620)


## விஷேட பூசை

(பருத்தித்துறை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி இலட்சார்சனை நடைபெறவுள்ளது. (25)

## சிறுவரின் கல்வி விடயம்

(சிறுப்பிட்டி)

ஆண்டு இரண்டு தொடக்கம் ஐந்து வரையிலான சிறுவர்களின் நலன் கருதி விரைவில் ஒரு சில முக்கிய பாடசாலைகளையாவது கல்வி கற்பதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமென சிறுப்பிட்டி கிழக்கு சிற்றூரவை முயற்சி செய்து வருகின்றது. இதே முயற்சியில் சிறுப்பிட்டி செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபையும் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சர்வோதயத் தலைவர் விடுதலை

(விசேட நிருபர்)

யாழ். சர்வோதய தலைவர் திரு. கே. சிவசுப்பிரமணியம் நேற்று காலை யாழ். வந்து சேர்ந்தார்.

நிவாரண உதவி வேலைகள் நிமிர்த்தம் வவுனியாவில் அவர் தங்கி இருந்தபொழுது சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பத்து நாட்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலையாகி அவர் நேற்றுக் காலையில் சைக்கிள் ஒன்றில் யாழ். வந்ததைக் காண முடிந்தது. (21)

## இடமாற்றமும் பதவி உயர்வும்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் தா. சந்திரசேகரம் பதவியிலிருந்து கடந்த மாதம் முதல் ஓய்வு பெற்றுள்ளார். இதனையடுத்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபராக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரி எஸ். ஞானநேசன் பதவி உயர்த்தப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். (25)

# எரிந்த சடலத்தின் மீது ஹெலி வேட்டு

(வடமராட்சி)

கரவெட்டியார்க்கருப் பகுதியிலுள்ள வேதக்களி என்ற சுடலையில் நள்ளிரவில் எரிந்துகொண்டிருந்த பிணமொன்றின் மீது ஹெலிதாக்குதல் இடம்பெற்றது. இச்சம்பவத்தால் சடலம் சின்னாபின்னப்பட்டு சிதறியது.

இச்சம்பவம் பற்றிதெரிய வருவதாவது; இப்பகுதியில் மரணமான வயோதிபர் ஒருவரின் சடலத்தை உறவினர்கள் மாலைநேரத்தில் மேற்படி சுடலையில் தீயிட்டுக் கொளுத்திவிட்டு வீடு திரும்பினர். சடலம் நள்ளிரவு வேளையில் சுடர்விட்டு எரிந்தபோது கிலிகொண்ட ஹெலி மேற்படி சடலத்தின் மீது தாக்குதல் தொடுத்தது. இதனால் சடலம் சின்னாபின்னப்பட்டு சிதறியது.

உரிமையாளர்கள் இச்சடலத்தை மறுநாள் காலையில் தீயிட்டுக் கொளுத்தினர். (18)

## விளையாட்டுப் போட்டி

(சாவகச்சேரி)

வெளிமாவட்ட அகதிகள் முகாமான மட்டுவில் மகா வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் அகதிச் சிறுவர்களை உற்சாகப்படுத்தும் முகமாக அவர்கள் மத்தியில் விளையாட்டுப் போட்டி ஒன்றை தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியம் நடத்தி பரிசில்களும் வழங்கியது.

இந்த விளையாட்டுபோட்டிகளில் 5 வயது, 7 வயது, 10 வயது பிள்ளைகளே கலந்து கொண்டனர். திறமையுடன் ஆர்வமாக விளையாடிய பிள்ளைகளுக்கு கொப்பி, புத்தகப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (35)

# பூநகரியில் உத்தரவாதவிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்புத்துறை)

பூநகரிப் பகுதியில் ஒரு மூடை நெல்லின் உத்தரவாத விலை ரூபா 700/- ஆகவும், ஒரு கிலோ அரிசியின் விலை ரூபா 19/- ஆகவும் விற்பனை செய்யப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பூநகரியிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு பத்து கிலோ அரிசி எதுவித கட்டுப்பாடுமின்றிக் கொண்டுசெல்லலாமென்றும் இந்த நடைமுறை இம்மாதம் ஐந்தாம் திகதி புதன்கிழமையிலிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. எஸ். சாம் வியாபாரிகளின் கவனத்திற்கும், பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றார். (24)

## பருத்தித்துறை

# வைத்தியசாலைக்கு மீண்டும் பிரான்ஸ் குழு வந்துள்ளது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மருத்துவ சேவைகளைவழங்குவதற்காக பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு கடந்த புதன்கிழமை மாலை வந்து சேர்ந்துள்ளது.

இவ் வைத்திய சாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு திடீரென கொழும்பில் உள்ள அதன் தலைமையகத்தால் அழைக்கப்பட்டிருந்ததும் அறிந்ததே தற்போது வைத்தியசாலைப் பிரதேசம் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (25)

## வெற்றிவேண்டிப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்போரில், விடுதலைப்புலிகள் வெற்றியீட்ட வேண்டுமென்றுகோரி, ஆனைக்கோட்டைஉயரப்புலம் உத்துங்கவிநாயகர் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றுவருகிறது.

உயரப்புலம் இந்து இளைஞர் மன்றத்தினர், வாரந்தோறும் செவ்வாயும், வெள்ளியும் கூட்டுப் பிரார்த்தனையை நடாத்தி வருகின்றனர். (மா)

## தேர்த்திருவிழா

(விசேட நிருபர்)

அளவெட்டிதெற்குஸ்ரீநாகவரதநாராயணர்(நாகேஸ்வரம்) தேவஸ்தான தேர்த்திருவிழா நாளை 11ஆம் திகதி காலை 11 மணிக்கு நடைபெறும்.

தேர்த்திருவிழாவைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதான வைபவம் நடைபெறும். 12ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 13ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (21)

## திருட்டு முயற்சி

(வடமராட்சி)

நெல்லியடியில் அண்மையில் பொம்மர் தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் கொள்ளை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கொள்ளையர்களின் கைவரிசைக்கு உணவுப் பொருட்கள், துவிச்சக்கரவண்டிகள், பணம் என்பனவும் இலக்காகின.

நெல்லியடியில் பொம்மர் தாக்குதல் நடைபெற்ற சமயம் குய்யோ, முறையோ எனக் கதறிய வண்ணம் பொதுமக்கள் தமது உடைமைகளை விட்டு ஓடிய சமயமே இக் கொள்ளை சம்பவங்கள் நிகழ்ந்தன. (18)

## முதலுதவிப் பயிற்சி பெற்றவர்கள்

# சேவை மனப்பாங்குடன் செயல்பட வேண்டும்

— வாஞ்சி

(வடமராட்சி)

முதலுதவி பயிற்சிநெறியை மேற்கொள்பவர்கள் வெறுமனே சான்றிதழை மட்டும் இலக்காகவைத்து செயற்படாமல் மக்களுக்கு எந்தநேரமும் சேவைசெய்யும் தியாக உள்ளம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் இப் பயிற்சி நெறியின் உயர்ந்த இலட்சியத்தைப் பெறமுடியும்

இவ்வாறு நாவலர் மடம் அ. த. க. பாடசாலையில் முதலுதவி நிலையமொன்றை திறந்துவைத்து. உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும், கவிஞருமான திரு. மு. வெ. யோ. வாஞ்சிநாதன் அவர்கள் உரைநிகழ்த்தினார்.

யாழ். கல்வித்திணைக்களத்தின் முறைசாரக்கல்விப் பிரிவினால் அமைக்கப்பட்ட இந்த முதலுதவி சிகிச்சை நிலைய அங்குரார்ப்பன வைபவத்தில் திரு. வாஞ்சிநாதன் தொடர்ந்து பேசுகையில்;

இன்று இலங்கை அரசாங்கம் எம்மினத்தின் மீது நடாத்தி வரும் இனவழிப்பு நடவடிக்கையாக எமது மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. இந்த தாக்குதல்களின் போது உரியமுதலுதவிகள் வழங்கப்படுமிடத்து பல அரிய உயிர்களை பாதுகாக்க முடியும். எனவே ஒவ்வொரு முதலுதவியாளர்களும், தியாக உள்ளம், சகிப்புத்தன்மை, பொதுநலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சேவைசெய்ய வேண்டும் என்றார். (18)

## சிரமதானம்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயததில் அமைந்திருக்கும் முதலுதவி சிகிச்சை மையத்துக்கு கொழும்புத்துறை மேற்கு வாலிப இளைஞர்கள் சிரமதானப் பணியில் பெரியஅளவிலான பதுங்கு குழியை அமைத்து கொடுத்திருப்பதுடன் அந்த முதலுதவிமையத்துக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். (43)

## கிருஷ்ணஜெயந்தி விழா

(கொழும்புத்துறை)

ஈச்சமோட்டை அருள் மிகு ஞானவயிரவர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது.

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தேரடி அடியார்களால் கண்ணன் பஜனை கூட்டுப் பிரார்த்தனைகளும் நடைபெறும். (24)

## அகதிகளுக்கு உதவி

(கொழும்புத்துறை)

தீவுப்பகுதி பயிலுநர் ஆசிரியர் சங்கத்தினரால் பொது மக்களிடமிருந்து அண்மையில் சேகரிக்கப்பட்ட ஐந்து மூடை நெல், ஐந்து மூடை அரிசி, பத்து மூடை உடுபுடைவைகள் மற்றும் சவர்க்காரம், குளுக்கோஸ், தேயிலை, பாத்திரங்கள் ஆகியனவற்றைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக தமிழர் புனர்வாழ்வுக் சழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (24)

## தபால்கள்

# கிராம ரீதியாகப் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிக்கான தபால் பொதிகள், சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு, நிலைய அதிகாரிகளினால் சைக்கிள் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன. இதில் சுமார் முப்பது பொதிகள் வரை காணப்படுகின்றன.

அவற்றை கிராம ரீதியாக தரம் பிரிக்கும் வேலைகள் துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்னும் ஒரு கணிசமான அளவு தபால் பொதிகள் சுன்னாகம் தபால் நிலையத்தில் தரம் பிரிக்கப்படாதுள்ளன. இவையும் இன்னும் சில தினங்களில் கொண்டு வரக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு வந்து சேர்ந்துள்ள தபால் பொதிகள் அனைத்தும் கிராம ரீதியாக பிரிக்கப்பட்டு பொது கட்டிடத்தில் வைத்து விநியோகம் செய்யப்படவுள்ளன. (35)

## பலத்த காயம்

(பருத்தித்துறை)

நெல்லியடியில் இடம் பெற்ற பொம்மர் தாக்குதலில் கரவெட்டிமேற்கு சாமியின் அரசடியைச் சேர்ந்த இளைப்பாறிய அரச உத்தியோகத்தரான கணபதிப் பிள்ளை செந்தியா (இரத்தினம்) என்பவர் பலத்த காயமடைந்தார். இவர் பருத்தித்துறை அரசினர்வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றார். (25)

## சுகாதார வசதியீனத்தால் நோய் பரவுகிறது

(கொழும்புத்துறை)

கரையூர், குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த கரையோரப் பகுதிகளில் இருந்து பூநகரி மண்ணித்தலையில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து இருக்கும் அனேக மக்களுக்குப் போதிய குடிநீர், உணவு, மருத்துவ, சுகாதார வசதியின்மையால் வயிற்றோட்டம் வாந்தி நோய்கள் பரவி வருவதாக அங்கிருந்து வரும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு பல அகதி மக்கள் நோய் வாய்ப்பட்டு அவதிப்படுவதால் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாமல் மிக்க கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)


# மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

## பஞ்சலிங்கம் தயானந்தன்
(வீரவேங்கை சின்ன அக்காச்சி)

நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட பஞ்சலிங்கம் தயானந்தன் (வீர வேங்கை சின்ன அக்காச்சி) 02-09-90 இல் கஸ்தூரியார் வீதியில் நடந்த வாகன விபத்தில் அகால மரணமடைந்த செய்தியை கேள்வியுற்று ஈமச்சடங்குகளில் பங்குபற்றியும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், ஏனைய பல உதவிகள் வழங்கியவர்களுக்கும், நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் இதய பூர்வமான நன்றியறிவித்தலை தெரிவித்து கொள்கிறோம்.

தகவல்
குடும்பத்தினர்
உறவினர்கள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(B/ 1379)

## சிந்தனைக்கு

முறிக்க வேண்டுமென்று விரும்பும் கையை,
முத்தமிடுகின்றனர் பலர். - ஜார்ஜ் ஹெர்பெர்ட்.


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 10-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# நன்றி சொல்லத்தான் வேண்டும்

"முன்னாள் தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் எம்மோடு நெருங்கி ஒத்துழைப்புத் தருகின்றன. அவர்கள் அளிக்கும் மிகப் பெருமளவினதான உதவி பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அவர்கள் எமக்குப் பெருந்துணையாக இருக்கின்றார்கள்'' என பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா மூன்று தினங்களுக்கு முன் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

''மிகப் பெருமளவினதான உதவி'' என ரஞ்சன் விஜேரத்தினா குறிப்பிட்டதென்ன? கிழக்கு மாகாணத்தில் இந்த ''முன்னாள் தீவிரவாதக் குழுக்கள்'' சிறிலங்கா அரசாங்கத்திற்குச் செய்த உதவி என்ன?

சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் போர் தொடங்கி ஏறத்தாழ மூன்று மாதங்கள் ஆகின்றன. விடுதலைப் புலிகள் கிழக்கில் அழிக்கப்பட்டதாகவோ பலவீனப்படுத்தப்பட்டுவிட்டதாகவோ சுயாதீனமான செய்திகள் எவையும் தெரிவிக்கவில்லை ஆனால் சொல்லொண்ணா துன்பங்களைக் கிழக்கில் உள்ள அப்பாவித் தமிழ் மக்கள் அனுபவிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளுக்கும் - இராணுவத்திற்கும் சண்டை தொடங்கி இரண்டு மாதத்திற்குள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் 2500 க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். இன்றும் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள் தமிழர்களின் ஆறாயிரத்துக்குமேற்பட்ட வீடுகள் தீ வைக்கப்பட்டன; சூறையாடப்பட்டன. தமிழர் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் பெண்கள் வயது வேறுபாடு இன்றிப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

இச் சண்டையில் புலிகள் அழிக்கப்படவில்லை. தமிழ் மக்கள்தான் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்நிலையில் 'முன்னாள் தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள்' தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுத்ததைத் தவிர என்ன உதவியைச் செய்திருக்க முடியும்?

'முன்னை நாள் தீவிரவாதக் குழுக்கள்'' மீண்டும், மீண்டும் தமிழினத்திற்குத் துரோகம் செய்வதையே தொழிலாகக் கொண்டுள்ளன. அவர்களின் வரலாறு துரோகத்தின் வரலாறாகவே உள்ளன.

இந்திய இராணுவத்துடன் சேர்ந்து இரண்டரை வருடங்கள் தமிழ் மக்களைப் படுகொலை செய்தார்கள், தமிழர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்தார்கள். தமிழ் மக்களைப் படுகொலை செய்வதற்கு இந்தியா இவர்களைத் தமது ஏஜென்டுகளாகப் பயன்படுத்தியது. அதேவேளை இவர்கள் இந்தியா தமிழருக்கான உரிமைகளைப் பெற்றுத் தரும் என்றும் இது தமது இராஜ தந்திரம் எனக் கூறிக்கொண்டார்கள் முடிவாக இந்திய இராணுவமும், 'முன்னாள் தீவிரவாதக் குழுக்களும்' பரஸ்பரம் மாறி மாறித் தமிழரைக் கொன்றதைத்தவிர வேறொன்றுமில்லை.

அன்று யாருக்கு எதிராகப் போராடுகிறோம் என மக்களுக்குச் சொன்னார்களோ அவர்களுடன் சேர்ந்து நின்று கொண்டு இன்று தமிழ் மக்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்றார்கள்.

தமிழருக்குத் தனிநாட்டைத்தவிர வேறுவழி இல்லை எனக் கூறி ஆயுதம் தூக்கியவர்கள் இன்று ஒற்றையாட்சி, தேசிய ஐக்கியம் பற்றிப் பேசுகின்றார்கள்.

மண்டைதீவுப் படுகொலைகள் முடிந்தவுடன், பணயக் கைதிகள் மத்தியில் பேசிய 'முன்னாள் தமிழ்த் தீவிரவாதி' ஒருவர் சிங்களவருடன் இணைந்து நாம் தேசிய ஐக்கியத்தைகட்டி எழுப்ப சிறிலங்கா இராணுவத்தில் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட முன்வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தாராம்.

இம் 'முன்னாள் தீவிரவாதக் குழுக்களுக்கு' ஒன்றை மட்டும் தெளிவாக கூறிவைக்க வேண்டும். அதாவது விடுதலைப் புலிகளுக்கு எதிராக உங்களைப் பாவிப்பதற்கும் அதன்மூலம் தமிழரை அழிப்பதற்குமே உங்களுடன் சிறிலங்கா அரசாங்கம் நட்புக் கொண்டு உள்ளது. உங்கள் மீதுள்ள கொள்கைப்பற்றினால் அல்ல. இனிமேலும் உங்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் பற்றுதல் வைக்காது. ஏனெனில் உங்களுக்கு கொள்கையே இல்லையே!

ஆனால் சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் உங்களுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும். ஏனெனில் கிழக்கில் சிறிலங்காப் படை விடுதலைப் புலிகளிடம் திணறியபோது அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து காட்டிக் கொடுத்தவர்கள் அல்லவா? மேலும் இனப் படுகொலைக்கு திட்டமிடுபவர்களுக்கு புலிகள் அழிந்தால் என்ன, பொதுமக்கள் அழிந்தாலென்ன. அவர்களுக்கு வெற்றியே.

முன்னாள்தீவிரவாதக்குழுவினரான நீங்கள் புலிகளுக்கு எதிராகஎனச்சொல்லிக்கொண்டு தமிழ்இனத்தை அழிக்கும் எதிரியின் திட்டத்திற்கு துணை போகின்றீர்கள். இதன் மூலம் நீங்கள் சாதிக்க விரும்புவது என்னவென்றால் தமிழ் இன அழிப்பைத்தான். ஆனால் விட்டுக்கொடுப்பற்ற எமது விடுதலைப் போராட்டம் வெற்றி அடைவது நிச்சயம். அப்போது புதிய எட்டப்பர்களாக வரலாற்றில் மீண்டும் நீங்கள் சித்தரிக்கப்படுவீர்கள்.

# ஈழத் தமிழர்கள் வேண்டி நிற்பது

ஏகாதிபத்திய வாதிகளின் பிடியில் இருந்து சிக்கிய காலத்திலிருந்து ஈழம் வாழ் மக்கள் தமது மண்ணையும், சுதந்திரத்தையும் மீட்க வேண்டுமென்றே போராடி வருகின்றார்கள். அதற்காக இராணுவ ரீதியிலும், அமைதி வழியிலும் போராடித் தமது பெருமளவிலான உயிர், சொத்துக்களை இழந்திருக்கின்றார்கள். போராட்ட வளர்ச்சியின் இறுதிக்கட்டத்தில் தற்போது நிற்கின்றார்கள். இக்காலகட்டத்தில் மக்களின் வீடுகள், சொத்துக்கள் அழிக்கப்படுவது மட்டுமன்றிப் பொருளாதாரச் சீர்குலைவுக்கும் உள்ளாகி வருவதனால் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு ஓடி அகதிகளாக முகாம்களிலும், உறவினருடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நாளாந்த உணவுக்கே போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பலர் தமது பிரதேசங்களை விட்டு அகதிகளாக இந்தியாவுக்குச்சென்று அங்கு கொடுக்கும் நிவாரணங்களைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த அவல வாழ்வுக்கான காரணம் அவர் தம் சுதந்திரத்துக்காகப் போராடியமையே யாகும். தமது சொந்தப் பிரதேசங்களிலிருந்தே விரட்டியடிக்கப்பட்டு அகதியாக வாழ்கின்றார்கள் என்பதற்காக அவர்கள் தமது உரிமைகளை விட்டுக் கொடுக்கவோ, தம் மண்ணை இழந்து விடவோ தயாராகவில்லை. அதுமட்டுமன்றி தமிழீழத்தில் ஏறத்தாழ 39 இலட்சம் மக்கள் துன்பங்களையும், பட்டினிகளையும் அனுபவித்துக் கொண்டு போராடிக்கொண்டு தானிருக்கிறார்கள். இதுவரையில் ஒரு இலட்சம் மக்களே இந்தியாவுக்குச் சென்றுள்ளார்கள். இவர்களை மனிதாபிமான ரீதியில் ஆதரித்து வருவதை வரவேற்கும் அதே வேளையில்; இந்திய அரசின் அறிவிப்புகளும், கருத்துகளும் தமிழ்பேசும் மக்களை மிகவும் அவமானப்படுத்துவது போலத் தென்படுகின்றது. இலங்கைத் தமிழ்அகதிகளுக்கு இலங்கையிலேயே முகாம் அமைத்து உணவளிக்கும் பணியில் இந்திய அரசு முயற்சிப்பதும் அதற்காக இலங்கை அரசோடு பேச்சு வார்த்தை நடாத்துவதாகவும் அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. இந்த நேரத்தில் இந்திய மக்களுக்கு நாம் சொல்லிக்கொள்ள விரும்புவது யாதெனில் இலங்கைத் தமிழர் என்றுமே பிச்சை எடுத்து அடிமை வாழ்வு நடத்த விரும்புபவர்கள் அல்ல. ஒவ்வொரு குடும்பமுமே தனியான வீடுகளை அமைத்துத் தமது சொந்தப் பொருளாதாரத்தின் மூலம் வாழ்ந்து வந்தவர்கள்,

## வீரசுதந்திரமேயன்றி -

வாழ்ந்து வருபவர்கள் அதனாலேயேதான் இன்னமும் 39 இலட்சம் மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக ஓடி வராமல் உள்ளனர். ஏனையவர்களின் உழைப்பில் பிச்சை எடுத்து அடிமைகளாக வாழ்பவர்களாயின் அதைத் தமது நாட்டிலிருந்துகொண்டே சிங்கள அரசுக்குக் கால்பிடித்து வாழ்ந்திருக்கலாம். இவ்வளவு இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிராது ''ஈழத் தமிழர்கள் வேண்டி நிற்பது வீர சுதந்திரமேயன்றிப் பிச்சைச் சாப்பாடு அல்ல''. இந்திய அரசு சிலகாலங்களுக்கு முன்னர் பணத்தையும், உணவுப் பொருட்களையும், தனது படைப்பலத்தையும் காட்டித்

## பிச்சைச் சாப்பாடு அல்ல

தமிழர்களின் சுதந்திர தாகத்தை அடக்க நினைத்ததும் அது தோல்வியில் முடிந்ததையும் உலகம் அறியும். இன்றும்கூட தமிழர்கள் பல அழிவுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்போது வெறும் கவலைகளை வெளியிட்டுக்கொண்டிருப்பது எந்தப் பலனையும் தமிழருக்குத் தராது. தமிழ் மக்களால் வெறுத்தொதுக்கப்பட்ட நிலையில் அமைதிப்படை வெளியேறியதை மனதில் கொண்டு இன்னமும் தமிழ் மக்கள் மீது வஞ்சம் தீர்க்கும் முகமாக மௌனமாக இந்தியா இருக்குமானால் இந்தியா இன்னொரு தோல்வியையே எதிர் கொள்ள வேண்டியிருக்கும் பாலஸ்தீன மக்களின் சுயநிருணய உரிமையை அங்கீகரிப்பதில் இந்தியா காட்டிய அக்கறை இலங்கைத் தமிழர் விடயத்தில் காட்டாமல் இருப்பதும் அதை மறைக்கவே அகதி முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவே தமிழ் மக்கள் கருதுகின்றார்கள்.

இந்திய மக்களிடம் இன்று தமிழர்கள் வேண்டுவது எமது சுய நிருணய உரிமையை அங்கீகரித்துக் குரல் கொடுக்க வேண்டுமென்பதேயன்றி ஒற்றையாட்சியின் கீழ்தமிழருக்குச் சில உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்னும் வாதமல்ல.

எமது சொந்த நாட்டிலேயே அகதியாக நாம் வாழ இந்திய உதவி எமக்குத் தேவையில்லை அந்த அடிமை வாழ்வை விட இலங்கைத் தமிழர் போராடியே சாவார்கள். அல்லது அவர்கள் சந்ததியாவது சுதந்திரமாக வாழ்வார்கள். பஞ்சசீலங்கள், காந்தீயம் நடுநிலைமை எனும் பெருமைமிக்க பதங்களை பேசுவதை விடுத்துநடைமுறையில்காட்ட முனைய வேண்டுமென்பதே தமிழர் விருப்பு ஆகும்.

எங்கோ இருக்கும் ஈராக்கு மக்களுக்கு மருந்தும், பால்மாவும் அனுப்ப முனையும் இந்தியாவுக்கு; அருகில் இருக்கும் தமிழீழத்தில் எது நடக்கிறது எனப் பல வழிகளிலும் தெரிந்திருந்தும் சிங்கள அரசிடம் மண்டியிட்டு நிற்பது அனுமதி கேட்டுக்கொண்டிருக்கும் நிலையையிட்டுத் தமிழர் வருத்தப்படாமல் எவ்வாறு இருக்கமுடியும். இந்தியத் தமிழர் இந்தியஒற்றையாட்சியின் கீழ் உரிமையற்று வாழும் பரிதாப கையாலாகாத நிலையைப்பார்த்து இலங்கைத்தமிழர் அனுதாபப்படுவதை விட வேறென்ன செய்ய முடியும்.

# வல்லரசுகள் தலையிட வேண்டாம்; சதாம் உசைன் எச்சரிக்கை

(பாக்தாத்)

வளைகுடாப் பிரச்சினையில் வல்லரசுகள் தலையிட வேண்டாம் என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கெல்சிங்கியில் நேற்று நடைபெற்ற ஜோர்ஜ் புஷ்-கொர்பசேவ் பேச்சு வார்த்தைகள் முயற்சிகள் பயன் அளிக்காதுஎன்றும்அவர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்வுக்கும் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவுக்கும் செய்தி ஒன்றினை அனுப்பிய சதாம் உசைன் ''குவைற்றை ஈராக் பிடித்திருப்பது வரலாற்றுப் பூர்வமானது என்றும் எனவே இது தொடர்பான கொள்கையை ஈராக் மாற்றிக் கொள்ளாது'' என்று அறிவித்துள்ளார்

இதே வேளை கெல்சிங்கியில் இரு ஜனாதிபதிகளுக்கும் இடையே சுமுகமான முறையில் வளைகுடாப் பிரச்சினை குறித்து பேசப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கொள்ளை

(வடமராட்சி)

மாலி சந்தியிலுள்ள விசாசி ஹொட்டலில் நள்ளிரவில் புகுந்த கொள்ளையர் கோஷ்டியினால் சுமார் 5200 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது. (18)

## அமெரிக்கா உதவுமாம்

(வாஷிங்டன்)

குவைற் மீதான ஈராக்கின் படையெடுப்பைத்தொடர்ந்து பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு அமெரிக்கா உதவுமென ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

இது குறித்து கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளுக்கு அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் பேகரையும், திறைசேரி செயலாளரையும் அனுப்ப உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

துருக்கி, எகிப்து, ஜோர்டான் மற்றும் ஏனைய நாடுகளுக்கு கணிசமான பொருளாதார உதவி அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## நிவாரண உதவி வழங்கப்படுகிறது

(இணுவில்)

மாவிட்டபுரம், கொட்டடி கீரிமலை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த இருபத்தேழு குடும்பங்களைச் சேர்ந்த சுமார் நூற்றியிருபது பேர் இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான உணவு மற்றும் வசதிகளை புனர்வாழ்வுக் கழகமும் இணுவில் சிற்றூர் அவையினரும கவனித்து வருகின்றனர்.

அகதி நிவாரணப் பொருட்களும் இவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக இணுவில் பகுதி சிற்றூர் அவைத் தலைவர் நித்தியானந்தன் தெரிவித்தார். (22)

# முல்லைத்தீவு மக்கள் நிர்க்கதியான நிலையில்

# பட்டினியாலும் நோயினாலும் அவதி

(முல்லைத்தீவு)

சிறிலங்கா அரசு முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்ததைத் தொடர்ந்து முல்லைத்தீவு நகரையும் அதனை அண்டிய கிராமங்களையும் இருப்பிடமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டு நிர்க்கதியான நிலையில் பட்டினியாலும் நோய்களாலும் பீடிக்கப்பட்டு கடுமையாக அவஸ்தைப் பட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவில் தொடர்ச்சியாகஅன்றாடம் விமானத் தாக்குதல் நடந்துவருகிறது. இதனால் முள்ளியவளை, தண்ணீர்ஊற்று போன்ற இடங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல்கள், விமானப் படை விமானங்களின் குண்டு வீச்சு ஆகியவற்றிற்கு பயந்து ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.இந்த கிராமங்களிலும் விமான குண்டு வீச்சு அச்சுறுத்தல்கள் இருப்பதால் மக்கள் பயப்பீதியுடன் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

## ஒட்டிசுட்டான்

முள்ளியவளைப் பகுதியிலிருந்து விமானக் குண்டுவீச்சுக்கு அஞ்சி வெளியேறிய பொது மக்கள் ஒட்டிசுட்டானில், கோயில்களிலும், பாடசாலைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குப் போதுமான உணவு, மருந்து வகைகள் எதுவும் கிடைப்பதாக தெரியவில்லை. ஒட்டிசுட்டான் மத்திய மருந்தகத்தில் அப்பகுதியில் இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொற்று நோய்களை தீர்ப்பதற்கு போதுமான மருத்துவ வசதி எதுவும் இல்லாத நிலையில் பெரும் மருந்துப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது.

ஒட்டிசுட்டானில் தற்போது தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்கள் வாழ்வதற்கு புகலிடம் அற்ற நிலையில் மரங்களின் நிழலிலும் பற்றைகளிலும் தமது வாழ்வை நடாத்தி வருகின்றனர். அத்தியாவசிய வசதி அற்ற நிலையில் இவர்கள் வாழ்ந்து வருவதால் மிக விரைவில் ஆட்கொல்லி நோய்களுக்கு ஏராளமான மக்கள் உட்படலாம் என அங்குள்ள வைத்தியர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## வெட்டிக் கொலை

சிறிலங்கா இராணுவம் வள்ளங்களிலும், விமானப்படை ஹெலிக்கொப்ரர்களிலும் இறக்கி விடப்பட்டதைத் தொடர்ந்து நடத்திய கொலைவெறியில் வட்டுவாகல் எனும் இடத்தில் ஒருவர் கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டார்.

## புதுக்குடியிருப்பு

முள்ளியவளை தண்ணீர் ஊற்று போன்ற இடங்களில் உள்ள மக்கள் புதுக்குடியிருப்பு பகுதியை அண்டிய கிராமப் பகுதியிலும் தோட்டங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் எதுவித இராணுவ அச்சுறுத்தல்களும் இல்லாத காரணத்தால் அங்கு விமான அச்சுறுத்தல் இருந்தபோதிலும் மக்கள் தமது வாழ்வைக்களிக்கக் கூடியதாக உள்ளனர்.

## முல்லை நகரம்

முல்லைநகர மக்கள் அனைவரும் தற்போது பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிட்டனர். இருந்தும் சிறிலங்கா இராணுவம் அம் மக்களது சொத்து உடைமைகளை சூறையாடியதுடன் தீயிட்டுக் கொளுத்தியும் உள்ளது.

முல்லைநகர் மக்களில் பெரும்பாலானவர்கள் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்பவர்கள் ஆதலால் கடற்படை படகுகளிலிருந்து பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து கரையோர மக்களின் வீடுவாசல்கள் பெருமளவில்சேதமானது: தற்பொழுது இராணுவம் அம் மக்களுடைய சொத்துக்களை தீயிட்டுக் கொளுத்தியும் உள்ளது.

## வீரமரணம்

(கிண்ணியடி)

விடுதலைப்புலிகளின் பொறிவெடி ஒன்று தவறுதலாக வெடித்ததில் பழனி என்ற போராளி மரணமானார். கிண்ணியடியைச் சேர்ந்த இவர் கடந்த ஐந்தாம் திகதி இவ் வெடியில் சிக்கி மரணமானார்.

இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## மட்டு மாவட்----

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச பயங்கரவாதிகள் இம் மக்களுக்கு உணவு கிடைப்பதை திட்டமிட்டு தடை செய்து வருவதுடன், இதுவரையில் கிழக்கு மாகாணத்தில் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு உணவு கிடைக்காமல் முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் ''யாழ். மாவட்டத்தில் சிறிலங்கா அரச படையின் நடவடிக்கையினால் ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை ஏறத்தாள 14 நாட்களாக சரியான முறையில் உணவோ, மருத்துவ வசதிகளோ கிடைக்கவில்லை.

''சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அங்கு சென்று காயமடைந்தவர்களை அழைத்துவந்து வைத்திய வசதி செய்ய சிறிலங்கா அரசிடம் அனுமதி கேட்டும் அதற்கு இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதே வேளை அப்பகுதிக்கு உணவு கொண்டுசெல்வதையும் தடை செய்துள்ளது''.

''சர்வதேசத்தை ஏமாற்ற பெரிய அளவில் பொய்ப் பிரசாரங்களைச் செய்துவரும் சிறிலங்கா அரசு திட்டமிட்டு மறைமுகமாக தமிழீழ மக்களை இனப் படுகொலை செய்து வருகின்றது'' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்று

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டசமயம் மூவர் தந்திரமாகத் தப்பியோடிவிட்டனர். ஏனைய மூவரையும்இராணுவ முகாமுக்குள் இழுத்துச் சென்ற சிங்கள இராணுவத்தினர் அவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

## அகதிகள்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றவர்களும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்களும் வவுனியாவில்வைத்து இராணுவத்தினரால் பலாத்காரமான முறையில் இறக்கப்பட்டுள்ளதுடன்; இவர்களும் மேற்படி புதிய முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன.

## தமிழரின்-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எச். என். பெர்னாண்டோ கையொப்பம் இட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தாவது;

வடக்குக் கிழக்கில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப் போரில் மக்களே பெரிதும் இழப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

பிரகடனப் படுத்தப்படாத பொருளாதாரத்தடை, வடக்கு, கிழக்கு மக்களை பட்டினி நிலைக்குத் தள்ளி விட்டிருக்கிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறிலங்கா

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் குற்றச்சாட்டை நாம் மறுக்கின்றோம்.

உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுஉலக சமூகத்தைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டு தனது தமிழ் இன அழிப்பு சித்தாந்தத்தை சிறிலங்கா அரசு கனகச்சிதமாகச் செய்து கொண்டு வருகின்றது.

எமது மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமானது சர்வதேச விதிமுறைக்கு உட்பட்ட விதத்திலேயே நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எந்த ஒரு கட்டத்திலும் சிறிலங்கா அரசு கூறுவதுபோல இரசாயன ஆயுதங்களை நாம் பிரயோகிக்கவில்லை.

சர்வதேச போர் விதிமுறைகளுக்கு உட்பட்ட விதத்திலேயே சிறிலங்கா அரசபடைகளுடன் மோதுகின்றோம்.

ஆனால் சிறிலங்கா அரசு இதற்கு நேர்மாறான விதத்தில் நடந்து கொள்கின்றது.

சர்வதேச போர் விதிமுறைகளுக்கு முரணாக வைத்தியசாலைகள் மீதும், அகதிமுகாம்கள்மீதும், ஆலயங்கள்மீதும் பாடசாலைகள் மீதும்,பொது மக்கள் குடியிருப்புகள் மீதும் சிறிலங்கா அரச படைகள் தாக்குதலை நடாத்திக் கொண்டிருக்கின்றன.

இன்று எமது மண்ணிலேயே இருந்து கொண்டிருக்கின்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற உலக அமைப்புக்களே சிறிலங்கா அரசின் இந்த அடாவடித்தனங்களுக்குச் சான்று பகரும்.

மேலும் துர்நாற்றத்தை வெளிப்படுத்தும் ஒருவகை இரசாயனக்குண்டுகளை சிறிலங்கா அரசின் விமானங்கள் யாழ். குடாநாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது வீசி வருகின்றது.

இந்தக் குண்டு வீச்சுக்களின் சிதறல்களை பரிசோதனைக்கு உட்படுத்திய யாழ். பிரஜைகள் குழுவினர் அதில் பொட்டாசியம் நைத்திரேற், குளோரின், பொஸ்பரஸ், அலுமினியத் துகள்கள், கந்தகம், நைற்றோ செல்லோஸ் போன்ற நச்சு இரசாயனப் பதார்த்தங்கள் இருப்பதாக 20 - 08 - 1990 அன்று திகதியிடப்பட்ட அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## 24 மணிநேரத்தில்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை வீசிய குண்டுகளில் இரண்டு நல்லூர்ப்பகுதியில் வீழ்ந்து வெடித்தது. இதனால் அப்பகுதி அதிர்ந்தது.

நேற்று முன்தினமிரவு முதல் முதலில் நடந்த தாக்குதலில் அன்னசத்திர வீதியில் உள்ள வீட்டில் வீழ்ந்ததினால் காயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லும் வழியில் குடும்பத்தலைவனும், குழந்தையும் மரணமானதாகத் தெரியவருகின்றது.

நேற்றுக்காலைபத்துமுப்பது மணியளவில் தாழ்வாகபறந்து வந்த குண்டுவீச்சு விமானம் ஒன்று தட்டாதெரு சந்தியை அண்டிய ஒரு வாகனம் திருத்தும் பட்டறையின் முன்னால் குண்டுஒன்றை வீசியது. இதில் வீதியால் போய்க்கொண்டிருந்த ஒரு யுவதியும் முதியவர் ஒருவரும் உயிரிழந்தனர். இத்தாக்குதலில் உயிரிழந்த பெண்மணி வத்சலாதேவி பொன்னுத்துரை (வேலணை) என்னும் விஞ்ஞானப் பட்டதாரி எனத் தெரிய வந்தது. முதியவரை அடையாளம் காணமுடியவில்லை. சடலம் வெகுநேரமாகஅடையாளம்காணப்படாதநிலையில் அவ்விடத்திலேயே இருந்தது.

இந்தத் தாக்குதலில் ஆறு பொதுமக்கள் காயமடைந்தனர். ஜெயந்தி பாலசுந்தரம் பிள்ளை (வயது 18) எஸ்,ராஜநாதன் (வயது 21) குழந்தைவேலு சிவசம்பு (வயது37) செந்தில் நாயகம் வயது 43) ஆகியோரே காயமடைந்தவராவர்.

மாலை 4. 30 மணியளவில் மீண்டும் பாரிய விமானம் நகரை வட்டமிட்டு அதிர வைக்கும் குண்டுகளைவீசியது. இவ் விமானம் வீசிய குண்டுகள் இரண்டு குருசோ வீதியில் உள்ள நான்கு வீடுகளை சேதப்படுத்தியது, ஒரு கலைவத் தொழிற்சாலையும் சேதமாகியது. இவ் விமானம் வீசிய குண்டுகள் பல பாஷையூர் பகுதியிலும் கொட்டடிப் பகுதியிலும் வீழ்ந்து வெடித்தன.

இறுதியாக மாலை ஏழுமுப்பது மணியளவிலும் நள்ளிரவு 12.30 மணியளவிலும் அவ்ரோ விமானம் ஒன்று நகரை அதிரவைக்கும் எட்டுக் குண்டுகளை வீசிச்சென்றது.

## சிறிலங்காவுக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து இலங்கையர்களை தாயகம் கொண்டு வந்துள்ளதாக கூறிய அமைச்சர் இந்த ஸ்தாபனம் இது விடயத்தில் மேலும் பல விமானங்களை வாடகைக்கு அமர்த்தியுள்ததாகவும் கூறினார்.

## அம்பாறை

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது யாழ். மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் ஊர்காவற்றுறை, மண்டைதீவைச் சேர்ந்த 300 க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கிராம ரீதியாக கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கையும், திகதியும் நாளை பத்திரிகையில் வெளிவரும்.

## நிலாவெளி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இந்தஇளைஞர்கள் பற்றிய விபரம் எதுவும் இதுவரை தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### செல்வி வத்சலாதேவி பொன்னுத்துரை (Bsc)

வேலணையைச் சேர்ந்த திரு. திருமதி பண்டிதர் அ. பொன்னுத்துரை (இளைப்பாறிய அதிபர்) இவர்களின் கனிஷ்ட புதல்வியான செல்வி பொ. வத்சலாதேவி 9. 9, 90 அன்று அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு (ஆசிரியை கொழும்பு), திரு கல்யாணசுந்தரம் (ஆசிரியர் நாரந்தனை), திருமதி. கமலாதேவி தர்மலிங்கம் (ஆசிரியை திருநெல்வேலி), பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (யாழ். பல்கலைக்கழகம்), டாக்டர் விமலேந்திரன் (கனடா), திரு. பாலேந்திரன் (பொறியியலாளர் கனடா), திருமதி. விமலாதேவி விஜயகுமார் (ஆசிரியை யாழ்ப்பாணம்), திரு. யோகேந்திரன் (பொறியியலாளர் லண்டன்), திரு. இரவீந்திரன் (கணக்காளர் லண்டன்), திரு. புவனேந்திரன் (கணக்காளர் லண்டன்), செல்வி நிர்மலாதேவி (இரசாயன பகுப்பாளர் சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசந்துறை) ஆகியோரின் அருமைச் சகோதரியாவார்.

திரு. க. திருநாவுக்கரசு (கணக்காளர் அரச அச்சகம், கொழும்பு), திருமதி ப. கல்யாணசுந்தரம் (ஆசிரியை யாழ்ப்பாணம்), திரு. எஸ். தர்மலிங்கம் (ஆசிரியர்), திருமதிஇ.பாலசுந்தரம்பிள்ளை(ஆசிரியை யாழ்ப்பாணம்), திருமதி ம. விமலேந்திரன் (கணக்காளர் கனடா), திருமதி வி. பாலேந்திரன் (கனடா), திரு. எம். விஜயகுமார் (மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அதிகார சபை, மாங்குளம்), திருமதி டாக்டர் வி. யோகேந்திரன் (லண்டன்), திருமதி எஸ். இரவீந்திரன் (லண்டன்), திருமதி டி. எஸ். புவனேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (10. 9. 90) திங்கட்கிழமை கொக்குவில் சேச் லேனில் திரு. விஜயகுமார் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில்தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(B/1381) பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.